# ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி
## [ தன்னாட்சி ]

**REACCREDITED WITH 'B++' GRADE BY NAAC**

**( DST - FIST & DBT - STAR SPONSORED )**

**பேர்லேண்ட்ஸ், சேலம் – 16.**

HAND + HEART + HEAD



## ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி விடுதி விதிமுறைகள்

## 2025 – 2026

# ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி விடுதி

## கல்லூரி விடுதி வாழ்க்கையின் நோக்கங்கள்

எளிய வாழ்வும், உயர்ந்த எண்ணமும் கொண்ட வாழ்வை உருவாக்குவதும், உழைப்பின் உயர்வுக்கு சிறப்பு அளித்தலும் முறையான வாழ்க்கைப் பயிற்சி அளிப்பது விடுதியின் முக்கிய குறிக்கோளாகும்.

## விதிமுறைகள்

1. மாணவிகள் சம்பந்தமான விஷயங்களில் கல்லூரிக் கமிட்டியின் முடிவே இறுதியானதாகும்.
2. கல்லூரி இயக்குநர் அவர்களும், கல்லூரி செயலர் அவர்களும் விடுதிக்குப் பிரதம பாதுகாப்பாளர்களாகவும், கல்லூரி முதல்வர் அவர்கள் வார்டனும் ஆவார்கள்.
3. மாணவிகளை கண்காணிக்கும் நேரிடைப் பொறுப்பு, கண்காணிப்பாளர்களுடையதாகும்.
4. அவ்வப்பொழுது மாணவிகளுக்கு அறிவிக்கும் செய்திகள், பழக்கவழக்கங்கள் இவற்றை கண்காணிப்பாளர்கள் நேரிடையாக மாணவிகளிடம் தெரிவிப்பார்கள்.
5. மாணவிகள் கண்காணிப்பாளர்கள் கூறுவதை தவறாமல் பின்பற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள்.
6. ஆண்டு தோறும் விடுதியில் மாணவியர் சேர்ந்ததும் அவர்களுக்கு வரிசை எண் தரப்படும். பெற்றோர்கள் எழுதும் கடிதங்களின் முகவரியில் பெயருடன் எண்ணையும் சேர்த்து எழுத வேண்டும்
7. மாணவிகட்கு எக்காரணம் கொண்டும் கொடுக்கப்பட்ட அறையை மாற்றிக் கொடுக்கப்படமாட்டாது. மாணவிகள் அவரவர்க்கு ஒதுக்கப்பட்டுள்ள அறையில் தான் உறங்க வேண்டும். மற்ற மாணவிகள் அறையில் சென்று கண்டிப்பாக உறங்கக் கூடாது. மற்றவர்கள் அறைக்குச் சென்று பேசிக் கொண்டு இருக்கக் கூடாது. அவ்வாறு வேறு மாண்விகளின் அறைக்கு மாணவி சென்று பேசிக் கொண்டிருந்தாலோ, வேறு அறையில் சென்று உறங்கினால் விடுதியிலிருந்து நீக்கம் செய்தல் போன்ற கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
8. கல்லூரி நாட்களில் விடுமுறை எடுக்க விரும்பும் மாணவியர்கள் முன்கூட்டியே தங்கள் வகுப்பு ஆசிரியையிடம் கையொப்பம் பெற்ற பின்பே, முதல்வரிடம் அனுமதி கோர வேண்டும்.
9. மாணவிகளை கல்லூரி ஹாஸ்டலிற்கு கொண்டுவந்து விடுவதற்கும், ஹாஸ்டலில் வந்து மாணவிகளை பார்ப்பதற்கும், விடுமுறைக்கு மாணவிகளை வீட்டிற்கு அழைத்து செல்வதற்கும் பெற்றோர்களுக்கு மட்டும் தான் அனுமதி உண்டு. இவ்விதிகளை மீறி நடப்பார்களேயானால் அவர்களை விடுதியிலிருந்து நீக்க நேரிடலாம் என்று அறிவிக்கலாகிறது.



10. திருமணமான மாணவிகளுக்கு விடுதியில் தனி அறை ஒதுக்கப்படும்.
11. ராகிங் செய்வது சட்டப்படி குற்றமாகும். விடுதியில் தங்கியிருக்கும் போது ராகிங் – ல் ஈடுபட்டாலோ அல்லது முன்னர் படித்த கல்வி நிறுவனத்தில் ராகிங் குற்றத்தில் ஈடுபட்டிருந்ததாக தெரிய–வந்தாலோ கல்லூரியிலிருந்தும் விடுதியிலிருந்தும் வெளி – யேற்றப்படுவார்கள்.

## கட்டண விவரம்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | நுழைவுக் கட்டணம் | 200 - 00 |
| | பொறுப்புத் தொகை ( Refundable ) | 3000 - 00 |
| | பராமரிப்புச் செலவு | 3300 - 00 |
| | விடுதி அபிவிருத்திக் கட்டணம் | 1200 - 00 |
| | மொத்தம் ரூ. | **7,700 - 00** |

2. பொறுப்புத் தொகையை விடுதியிலிருந்து மாணவியைப் படிப்பு முடித்து அழைத்துச் செல்லும் போது திருப்பித்தரப்படும். வருட இடையில் எக்காரணம் கொண்டும் விடுதியை விட்டுச் செல்லும் மாணவிகட்கு பொறுப்புத்தொகை தவிர மற்ற எந்தக் கட்டணமும் திருப்பித்தரப்பட மாட்டாது.
3. மாணவிகள் எந்த பருவத்தில் வந்து விடுதியில் சேர்ந்தாலும் மேற்கண்டவாறு கட்டணம் செலுத்த வேண்டும்.
4. மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவிக்கு உணவுக்கட்டணம் ரூ.4,500/- செலுத்த வேண்டும். கல்லூரி வார விடுமுறை நாட்களில் மாணவியர் விடுமுறையில் சென்றால் விடுதி கட்டணம் குறைக்கப்படமாட்டாது. ஐந்து நாட்களுக்கு மேல் கல்லூரி விடுமுறைவிட்டால் மட்டுமே உணவு கட்டணம் குறைக்கப்படும். கல்லூரியின் கடைசி வேலை நாள் வரை, ஹாஸ்டல் மாணவிகள், கல்லூரிக்கு செல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.
5. ஒரு மாதத்திற்குரிய செலவுப் பட்டியல் அடுத்த மாதம் 10-ம் தேதிக்குள் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படும். அத்தொகையை 30-ம் தேதிக்குள் கண்டிப்பாக செலுத்திவிட வேண்டும். அப்படி செலுத்தத் தவறியவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூபாய்க்கு 5 வீதம் கூடுதல் தொகை செலுத்துதல் வேண்டும். மாதம் தவறாமல் உணவுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். அப்படி செலுத்த தவறியவர்கள் விடுதியில் தங்குவதற்கு அனுமதியில்லை.
6. **மாணவிகள், பருவத் தேர்வு நாட்களில் விடுதியில் தங்கி இருந்து தான் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள். அவர்களது பருவத் தேர்வு முடிந்த பிறகே வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.**